மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை
இ.ம.எண்.02/2023
இ.ம.எண்.01/2021
அ.வ.எண்.278/2013

1. சின்னதம்பி
2. சின்னம்மாள்
3. சரசா ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. செல்லப்பன்
2. சேகர்
3. பாப்பா ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 03.11.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.முத்துசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 148 ன் கீழ் கடந்த 16.02.2023 ம் தேதியில் செலவுத்தொகை செலுத்தாததால் தள்ளுபடி செய்யப்பட்ட இ.ம.எண்.01/2021 என்ற மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்து, மேற்படி வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 07.06.2019 ம் தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டது. இந்நிலையில் மேற்படி தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக் கொள்ளுமாறு

மனுதாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி மனுதாரர்களால் காலவரையறைச் சட்டம் பிரிவு 5ன்கீழ் இ.ம.எண்.01/2021 தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு விசாரணைக்கு பின்பு 16.02.2023ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/—ஐ செலவுத்தொகையாக செலுத்தும்பட்சத்தில் மேற்படி மனு அனுமதிக்கப்படும் என கடந்த 09.02.2023ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது.

(ii) இந்நிலையில் மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு கடந்த 08.02.2023ம் தேதியில் திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் மேற்படி உத்தரவு பற்றி மனுதாரர்களுக்கு தெரியாமல் போனதால் எதிர்மனுதாரர்களுக்கு உரிய நேரத்தில் செலவுத்தொகை செலுத்த இயலவில்லை. அதனால் கடந்த 09.02.2023ம் தேதியில் உத்தரவுப்படி செலவுத்தொகை செலுத்தாத காரணத்தால் இ.ம.எண்.01/2021 என்ற மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே மேற்படி காலதாமதம் வேண்டுமென்றே நேர்ந்ததல்ல. கடந்த 20.02.2023ம் தேதியன்று மனுதாரர்கள் வழக்கறிஞரை சந்தித்த போது தான் செலவுத்தொகையை செலுத்த வேண்டிய விபரம் தெரியவந்தது. மனுதாரர்கள் தற்போது செலவுத்தொகையை செலுத்த தயாராக உள்ளனர். எனவே தள்ளுபடி செய்யப்பட்ட இ.ம.எண்.01/2021 என்ற மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) <u>எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

(i) மனுதாரர்களின் மனு பொய். சட்டப்படிக்கும், சங்கதிகளின் படிக்கும் நிலைக்கத் தக்கதல்ல. இ.ம.எண்.01/2021 என்ற மனுவில் எதிர்மனுதாரர்கள் 16.02.2023ம் தேதிக்குள் செலவுத்தொகையை எதிர்மனுதாரர்களுக்கு செலுத்த வேண்டும் என இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட நிலையில், 16.02.2023ம் தேதி மாலை 5.15 மணி வரை எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகை செலுத்தாததால் மேற்படி மனுவை இந்நீதிமன்றம் மீண்டும் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது.

(ii) செலவுத்தொகை செலுத்த வாய்தா வைக்கப்பட்ட 16.02.2023ம் தேதியில் மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு உடல்நலக்குறைவு ஏற்படடதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் அதனால் பின்னிட்டு தான்

செலவுத்தொகை குறித்து நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றி மனுதாரர்களுக்கு தெரியவந்ததாக கூறுவது பொய்யாகும். மேற்படி சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர்கள் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்கள் வேண்டுமென்றே அலட்சியமாக செலவுத்தொகை செலுத்தாமல் இருந்துவிட்டு தற்போது வலுவற்ற காரணங்களை கூறி வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்கவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

(iii) மேலும் மனுதாரர்கள் தற்போது வரை மேற்படி இ.ம.எண்.01/2021ல் பிறப்பிக்கப்பட்ட செலவுத்தொகையை செலுத்துவதற்கு காலநீட்டிப்பு கோரி தனியாக எந்த மனுவும் தாக்கல் செய்யாததால் இம்மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர்கள் தரப்பில் இ.ம.எண்.01/2021ல் கடந்த 09.02.2023ம் தேதியில் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக ரூ.1500/–ஐ 16.02.2023ம் தேதிக்குள் மனுதாரர்கள் செலுத்த வேண்டும் என்ற இந்நீதிமன்றத்தின் உத்தரவை மனுதாரர்கள் பின்பற்றாததால் மேற்படி மனு கடந்த 16.02.2023ம் தேதியில் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி தேதியில் மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாததால் உரிய நேரத்தில் செலவுத்தொகை பற்றிய உத்தரவை மனுதாரர்களால் தெரிந்து கொள்ள இயலவில்லை என்றும், தற்போது செலவுத்தொகையை செலுத்த தயாராக உள்ளனர் என்றும், எனவே

இ.ம.எண்.01/2021 ஐ மீண்டும் கோப்பிற்கு எடுக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் செலவுத்தொகை செலுத்த வாய்தா வைக்கப்பட்ட 16.02.2023 ம் தேதியில் மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு உடல்நலக்குறைவு ஏற்படடதால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் பின்னிட்டு தான் செலவுத்தொகை குறித்து நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றி மனுதாரர்களுக்கு தெரியவந்ததாக கூறுவது பொய் என்றும், மேற்படி சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர்கள் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றும், மனுதாரர்கள் வேண்டுமென்றே அலட்சியமாக செலவுத்தொகை செலுத்தாமல் இருந்துவிட்டு தற்போது வலுவற்ற காரணங்களை கூறி வழக்கு நடவடிக்கைகளை இழுத்தடிக்கவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்கள் தற்போது வரை மேற்படி இ.ம.எண்.01/2021 ல் பிறப்பிக்கப்பட்ட செலவுத்தொகையை செலுத்துவதற்கு காலநீட்டிப்பு கோரி தனியாக எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு தாக்கல் செய்து கடந்த 07.06.2019 ம் தேதியன்று தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னிக்க கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5 ன்கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.01/2021 என்ற மனுவில் 16.02.2023 ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/– செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் அனுமதிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் மேற்படி மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

(iv) இந்நிலையில் மேற்படி செலவுத்தொகை செலுத்த வேண்டி உத்தரவிடப்பட்டிருந்த தேதியில் மனுதாரர்களின் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு மேற்படி செலவுத்தொகை உத்தரவு குறித்து தெரியவில்லை

என்றும், அதனால் மேற்படி தவறுகை வேண்டுமென்றே நிகழ்ந்ததல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொள்கையில், மனுதாரர்கள் வழக்கறிஞரை வைத்து வழக்காடினாலும் தங்கள் வழக்கில் ஒவ்வொரு வாய்தாவிலும் வழக்கு நடவடிக்கைகள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமையும் உடையவர்கள் ஆகிறார்கள்.

(v) அவ்வாறு உள்ள நிலையில் வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாததால் செலவுத்தொகை குறித்த தகவல் தெரியவில்லை என மனுதாரர்கள் கூறுவது ஏற்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது. அதே சமயத்தில் வழக்கறிஞர்களின் உடல்நிலை குறைபாடு போன்ற தனிப்பட்ட காரணங்களினால் வழக்காடிகளின் வழக்கு பாதிக்கப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டையும் இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது. இருப்பினும் மேற்படி 16.02.2023 ம் தேதியில் செலவுத்தொகை செலுத்த காலவரம்பு நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி காலக்கெடுவிற்கு பின்னிட்டு உ.வி.மு.ச. பிரிவு 148 ன்கீழ் மனு தாக்கல் செய்ய இயலாது என்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(vi) இந்நிலையில் மேற்கண்ட சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால், ***"2006(3) CTC 418, Gowri Ammal v. Murugan and others"*** என்ற வழக்கில் ***"Even after expiry of the time limit the petition under section 148 of CPC is maintainable."*** என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது.

(vii) மேற்கண்ட முன்தீர்ப்பினை இவ்வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் சங்கதிகளுடன் பொருத்தி பார்க்கையில், மனுதாரர்கள் தங்களது வழக்கறிஞருக்கு உடல்நிலை சரியில்லாததால் தங்களால் மேற்படி செலவுத்தொகை ரூ.1500/—யை செலுத்த இயலாமல் போய்விட்டதாகவும், தற்போது தான் மேற்படி செலவுத்தொகையை செலுத்த தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளதை கருத்தில் கொள்கையில் மனுதாரர்களுக்கு செலவுத்தொகையை செலுத்த மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என்றும், இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம்

தீர்மானிக்கிறது. இருப்பினும் மனுதாரர்களால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்ட காலவிரயத்தை கருத்தில் கொள்கையில், மேற்படி காலவிரயத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரர்கள் தற்போது இம்மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1500/—ஐ செலவுத்தொகையாக செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. மனுதாரர்கள் இ.ம.எண்.01/2021ல் செலுத்த வேண்டிய ரூ.1500/—ம், தற்போது இம்மனுவில் உத்தரவிடப்பட்டுள்ள ரூ.1500/—ம் சேர்த்து மொத்தம் ரூ.3000/—த்தை எதிர்வரும் 05.12.2023ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரர்கள் இ.ம.எண்.01/2021ல் செலுத்த வேண்டிய ரூ.1500/—ம், தற்போது இம்மனுவில் உத்தரவிடப்பட்டுள்ள ரூ.1500/—ம் சேர்த்து மொத்தம் ரூ.3000/—த்தை எதிர்வரும் 05.12.2023ம் தேதிக்குள் எதிர்மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 05.12.2023.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை</u>

ஒம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.